12.08.2025

O.S.No. 88/2020

DW1-Raj – S/o. Manuvel

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 12.08.2025.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> ( வாதி தரப்பில்)

4. 1 முதல் 3 வாதிகள் மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த சீராய்வு மனு எண்.1376/2020 உத்தரவில் விசாரணை நீதிமன்றத்தில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 152 ன் கீழ் மனு தாக்கல் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. அதன் அடிப்படையில் வாதிகள் இடைமனு எண்.10/2023 in OS.541/2009 வழக்கில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 152 ன் கீழ் மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. வாதிகள் இடைமனு எண்.10/2023 in OS.541/2009 வழக்கில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 152 ன் உத்தரவில் எனக்கு 60 சென்ட் மட்டுமே பாத்தியம் என உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான் ஆனால் அந்த 60 சென்ட் எந்த இடம் என்று ஒதுக்கவில்லை. அதன் பேரில் நான் மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த சீராய்வு மனு எண்.1857/2025 தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. என்னிடம் காண்பிக்கப்படுவது கணினி இணைய வழி பதிவிறக்கம் செய்யப்பட்ட சீராய்வு மனு எண்.1857/2025 வழக்கு குறிப்பு

என்றால் சரிதான். மேற்படி வழக்கு குறிப்பு ஆவணத்தின் ஒரு அங்கமாக பாவிக்கப்படுகிறது.

8. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்து அதில் இரு தரப்பிலும் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. என்னிடம் காண்பிக்கப்படுவது நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் மாதிரி வரைபடம் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கை நீ.சா.ஆ.1 ஆகவும், மாதிரி வரைபடம் நீ.சா.ஆ.2 ஆகவும் பி.வா.சா.ஆ.1 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

10. கடந்த 16.10.2017 ல் ஏ.ஆர்.எஸ் ராமலிங்கம் எந்த ஆவணமும் எழுதிவைக்காமல் Intestate ஆக இறந்துவிட்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

11. ஏ.ஆர்.எஸ் ராமலிங்கத்தின் மனைவி தான் 1ம் வாதி என்றும், 2,3 வாதிகள் ஏ.ஆர்.எஸ் ராமலிங்கத்தின் மகன்கள் என்றும் சொன்னால் சரிதான்.

12. வா.சா.1 மாடசாமி என்பவர் சுப்பையா குடும்பத்தின் மேலாளராக நீண்ட நாட்களாக பணியாற்றி வந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

13. மாடசாமி என்பவர் 1 முதல் 3 வாதிகளின் பொது அதிகார முகவர் என்றால் இவ்வழக்கில் நியமிக்கப்பட்டுள்ளார் மற்றபடி எனக்குத் தெரியாது.

14. தபசில் சொத்தானது ஊர்மேலழகியான் வருவாய் கிராமத்தின் சர்வே எண். 149/1ல் மொத்தம் 85 சென்ட் விஸ்தீரணம் கொண்டது என்றால் சரிதான். மொத்தம் 85 செண்டிற்கு வடக்கு பக்கம் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். ஆனால் அதை பள்ளிக்கூடத் தெரு என அழைப்பார்கள்.

15. மொத்தம் 85 செண்டிற்கு மேற்கு பக்கம் தென்வடல் பாதை உள்ளது என்றால் சரிதான்.

16. மொத்தம் 85 செண்டிற்கு தெற்கு பக்கம் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது என்றால் சரிதான்.

17. மொத்தம் 85 செண்டிற்கு கிழக்கு பக்கம் யார் இடம் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. சர்வே நம்பர் தெரியும். 149/2A, 149/2B, 149/3 மற்றும் தென்வடல் பள்ளிக்கூடத் தெரு உள்ளது. 149/2A, 149/2B, 149/3 உரிமையாளர்கள் பெயர் என்னவென்றால் எனக்குத் தெரியாது.

18. மொத்தம் 85 செண்டில் வடகிழக்கு மூலையில் தான் 8 சென்டை அருணாச்சலம் என்பவர் எ.ஆர்.எஸ். ராமலிங்கம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அருணாச்சலம் கிரையம் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். ஆனால் தாக்கல் செய்யவில்லை.

19. அருணாச்சலம் அவர் கிரையம் பெற்ற 8 சென்டில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். எப்போது வீடு கட்டினார் என்றால் எனக்குத் தெரியாது. அந்த வீட்டின் மேற்கு பக்க அற்றில் தென்வடலாக சுவர் முழுவதும் கட்டிவிட்டார் என்றால் சரியல்ல பகுதியாக சுவர் கட்டியுள்ளார் மீதி இடத்தில் கம்பி வேலி போட்டுள்ளார். அருணாச்சலத்தின் சுவருக்கு மேற்கு பக்கம் மற்றும் கம்பி வேலிக்கு மேற்கு பக்கம் அருணாச்சலத்திற்கு இடம் இல்லை என்றால் சரியல்ல சுவரை பராமரிக்க மட்டும் இடம் விட்டுள்ளார்.

20. வாதிகள் பிராதுடன் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்திற்கு என் தரப்பில் ஆட்சேபனை செய்யப்படவில்லை என்றால் எனக்கு நினைவில்லை.

21. இவ்வழக்கின் பிராது 2வது தபசில் 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.224/2019 வழக்கு விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வாதிகளின் பாத்தியப்பட்ட சொத்து அல்ல.

22. வா.சா.ஆ.2 ஆவணம் என் கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் பெயர் மனுவேல் குமாரர் M. ராஜ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை சண்முகராஜ் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். எனக்கு அரசு ஆவணங்கள் அனைத்தும் என்ன பெயரில் உள்ளது என்றால் ராஜ் என்ற பெயரில் உள்ளது.

23. வா.சா.ஆ.2 கிரைய சொத்தின் தபசில் விபரத்தில் 60 சென்ட் கிரையம் பெற்றதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

24. வா.சா.ஆ.2 கிரைய சொத்தின் எல்கை மால் சரியானது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் பக்கம் எண் 8ல் சர்வே எண் 149/1ல் 24.03 ஏர்ஸ் இடத்திற்கு மட்டுமே மதிப்பு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 24.03 ஏர்ஸ் என்பது 60 சென்ட் இடம் என்றால் சரிதான் ஆனால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

25. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் பக்கம் எண் 8ல் காணப்பட்டுள்ள 50 தென்னை மரங்கள் தெற்கு பக்க இடத்தில் உள்ளது என்றால் சரிதான். நிலத்தின் முழு பகுதியிலும் பரவலாக உள்ளது.

26. வா.சா.ஆ.2 ஆவணத்தின் 9வது தாளாக மாதிரி வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வரைபடத்தை ஒப்புக்கொண்டு நானும், எ.ஆர்.எஸ் ராமலிங்கமும் கையொப்பமிட்டோம் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் என் கிரைய இடத்திற்கு வடக்கு மற்றும் கிழக்கு பக்கம் எ.ஆர்.எஸ் ராமலிங்கத்திற்கு கையிருப்பாக 5 சென்ட் இடம் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 5 சென்ட் இடம் தான் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அ.வ.224/2019 வழக்கின் சொத்து விவரம் என்றால் சரியல்ல.

27. என் கிரைய சொத்தானது L வடிவில் காணப்பட்டுள்ள இடம் என்றால் சரிதான். வாதிகள் இடைமனு எண்.10/2023 in OS.541/2009

வழக்கில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 152ன் உத்தரவில் எனக்கு 60 சென்ட் மட்டுமே பாத்தியம் என உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான் அந்த 60 சென்ட் இடம் தான் L வடிவ சொத்து என்றால் சரிதான். ஆனால் மேற்படி உத்தரவின் பேரில் நான் மேல்முறையீடு தாக்கல் செய்ய தயார் செய்து வருகிறேன்.

28. விசாரணை நீதிமன்றம் எனக்கு 60 சென்ட் மட்டுமே பாத்தியம் என குறிப்பிட்டுள்ள நிலையில் நான் சந்திராவிற்கு 6 சென்ட் இடம் கிரையம் கொடுப்பதற்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

29. மேற்படி சந்திரா (2ம் பிரதிவாதி) எனது உறவினர் என்றால் சரியல்ல ஒரே இனத்தைச் சேர்ந்தவர் பக்கத்து ஊர்க்காரர்.

30. சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.224/2019 வழக்கில் சந்திரா 2ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

31. இந்த வழக்கிலும், சார்பு நீதிமன்ற வழக்கிலும் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை சந்திரா ஒப்பேற்பு செய்துள்ளார் என்றால் சரிதான்.

32. சீராய்வு மனு எண்.1857/2025 மனு தள்ளுபடி செய்த பின் என் தூண்டுதலின் பேரில் சந்திரா இதே நீதிமன்றத்தில் புதியதாக ஒரு அசல் வழக்கு 221/2025–ஐ உண்மையை மறைத்து பொய் சங்கதிகளிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

33. என் தூண்டுதலின் பேரில் வழக்கு தாக்கல் செய்ததால் தான் என்னை சந்திரா தரப்பினராக அந்த புதிய வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

34. 2வது தபசில் 1வது அயிட்ட சொத்தில் திருக்கோவில் சார்பில் கோயில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை.

இருதரப்பு சமரசத்திற்காக வழக்கு இலவச சட்ட மையத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.